செ.வெ.எண்: 60 நாள்:31.01.2018

<u>பத்திரிகை செய்தி</u>

வருகிற பிப்ரவரி மாதம் 3 ம் தேதி முதல் 11 ம் தேதி முடிய பாளையங்கோட்டை வ.உ.சி திடலில் நெல்லை புத்தகத் திருவிழா கோலாகலமாக நடைபெறவிருக்கிறது. இந்த புத்தகத் திருவிழாவில் 110 புத்தக அரங்குகளோடு சுமார் 1,00,000 த்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் இடம் பெற இருக்கிறது. தினந்தோறும் காலை 09.00 மணிமுதல் இரவு 09.00 மணிவரை நடைபெறும் இந்த புத்தகத் திருவிழாவில் தினந்தோறும் பிற்பகல் பள்ளி/கல்லூரி - மாணவ/மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடைபெற இருக்கிறது. அதனை தொடர்ந்து தினந்தோறும் எழுத்தாளர்கள் மற்றும் புகழ்பெற்ற ஆளுமைகளின் சொற்பொழிவுகள், பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

கல்லூரி மாணவ/மாணவியரின் புத்தகம் வாசிக்கும் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு **நெல்லை புத்தகத் திருவிழாவில் கல்லூரி மாணவர்களுக்கான நூல் திறனாய்வு** (Book Review Competition ) போட்டிகள் **நடைபெற உள்ளது**. நூல் திறனாய்வு போட்டிகள் இரு பிரிவுகளாக அமைந்துள்ளது.

<u>புனைகள் பிரிவு (Fiction)</u>

1) **புதுமைப்பித்தன்** 2) **கு. அழகிரிசாமி** 3) **ஜெயகாந்தன்** 4) **சுந்தர ராமசாமி** 5) **அசோக மித்ரன்**. 6) Peter Pan by JM Barrie 7) The Old Man and the Sea by Ernest Hemingway 8) 1984 by George Orwell 9) Serious Men by Manu Joseph 10) The Two States by Chetan Bhagat

<u>அ-புனைவுகள் பிரிவு (Non-Fiction)</u>

1) சமூக அரசியல் சிந்தனைகள் (Socio political thoughts) 2) பயணக்கட்டுரை (Travelogues) 3) சுற்றுச்சூழல் பாதுகாப்பு (Environmental conservation) 4) தமிழ் வரலாறு மற்றும் கலாச்சாரம் (Tamil History and culture) 5) அறிவியலும் மற்றும் தொழில் நுட்பமும் (Science and Technology) 6) அரசியல் பொருளாதாரம். (Political Economy)

<u>போட்டிக்கான விதிமுறைகள்:-</u>

1. **நெல்லை மாவட்ட கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மட்டும் பங்குபெறலாம்**.
2. **தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகள் பல்கலைகழக/ கல்லூரி பாடத்திட்டதில் இல்லாத படைப்புகளாக இருக்க வேண்டும்**.
3. போட்டிக்கு முன் பதிவுக்கட்டணம் கிடையாது
4. ஒரே மாணவர் இரு பிரிவுப் போட்டிகளிலும் (Fiction & Non -Fiction) கலந்து கொள்ளலாம்.
5. திறனாய்வு ஓராயிரம் வார்த்தைகளுக்குள் அமைதல் வேண்டும்.

6. திறனாய்வுகள் துறைத்தலைவர் கையொப்பத்துடன் கல்லூரி முதல்வர் வழியாக அனுப்புதல் வேண்டும்.
7. நேரடியாக அனுப்பப்பெறும் திறனாய்வுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
8. திறனாய்வு வந்து சேர இறுதி நாள் 06.02.2018
9. திறனாய்வு Soft Copy, Hard Copy அனுப்புதல் வேண்டும்.

தேர்வுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று திறனாய்வுகளுக்கு பரிசும் பராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். முதல் பரிசு ரூ.5000/- இரண்டாம் பரிசு ரூ.3000/- மூன்றாம் பரிசு ரூ.2000/- ஆகும். மேற்கண்ட பரிசுத் தொகை மதிப்புள்ள நூல்கள் வழங்கப்படும். இதனை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**முதல்வர் அவர்கள்**,
**ம.தி.த.இந்து கல்லூரி**,
**திருநெல்வேலி**,-627001.

புத்தகத் திருவிழாவின் இறுதி நாளில் (11.02.2018) சிறப்பு மலர் ஒன்று வெளியிட இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தின் தொன்மை, பண்பாடு, பெருமை, வரலாறு மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகியவை குறித்த படைப்புகள் அதில் இடம் பெறுகிறது. பொதுமக்களும் இந்த சிறப்பு மலருக்கு மாவட்டத்தின் பெருமைகளை சொல்லும் விதமாக கட்டுரை, கவிதை, சிறுகதை மற்றும் சிறு சிறு தகவல்களை தலைவர், தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மையம், உழுவை சாலை, என்.ஜி.ஓ “எ” காலனி, திருநெல்வேலி என்ற முகவரிக்கோ (அல்லது) nellaibookfair@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ 03.02.2018 ம் தேதிக்குள் கிடைக்கும் படி அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.